SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# ஜனவரி 2016 பரீட்சை - AA1 மட்டம்

**(January 2016 Examination - AA1 Level)**

வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: 13**

# வணிகம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669



**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

**இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்**

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

# AA1 பரீட்சை – ஜனவரி 2016

# (13) வணிகம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்கு வினாக்கான விடைகள் (OTQs)**
**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா 01ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:**

| வினா இலக்கம் | விடைகள் |
|---|---|
| 1.1 | 3 |
| 1.2 | 2 |
| 1.3 | 3 |
| 1.4 | 2 |
| 1.5 | 3 |
| 1.6 | - |
| 1.7 | 2 (4.7%) |
| 1.8 | 2 ($M_2=C_P+DD+TSD$) |
| 1.9 | 2 |
| 1.10 | 4 |
| 1.11 | சரி |
| 1.12 | பிழை |
| 1.13 | சரி |
| 1.14 | பிழை |
| 1.15 | சரி |
| 1.16 | பொருளாதார அபிவிருத்தி |
| 1.17 | உண்மை |
| 1.18 | பிரதியீடுகள் |
| 1.19 | (a) ஐக்கிய இராச்சியம் |
| | (b) ஐக்கிய இராச்சியம் |
| 1.20 | (a) ஐக்கிய இராச்சியம் |
| | (b) ஜப்பான் |

SRI LANKA

1.20 (a) உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஒப்பீட்டு அனுகூலங்களை

ஐக்கிய இராச்சியம் = மிளகு / உருளைக்கிழங்கு

6/12=0.5

ஜப்பான் = மிளகு / உருளைக்கிழங்கு

4/2= 2

ஆகவே உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஒப்பீட்டு அனுகூலத்தைப் பெறும் நாடு ஐக்கிய இராச்சியம்

(b) மிளகு உற்பத்திக்கான ஒப்பீட்டு அனுகூலங்கள்

ஐக்கிய இராச்சியம் = உருளைக்கிழங்கு / மிளகு

12/6 = 2

ஜப்பான் = உருளைக்கிழங்கு / மிளகு

2/4 = 0.5

ஆகவே மிளகு உற்பத்தியில் ஒப்பீட்டு அனுகூலத்தைப் பெறும் நாடு ஜப்பான் ஆகும்.

aat SRI LANKA

**பிரிவு *A* இன் நிறைவு**

## பகுதி - B

**அனைத்து (4) வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்**
**(மொத்த புள்ளி 40)**

## வினா 02ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்.

(a) **பொருளாதாரவளம்**

பொருளாதார வளங்கள் என்பது மனிதனுடைய தேவை, விருப்பங்களை திருப்திப் படுத்துகின்ற பொருட்களையும், சேவைகளையும் உருவாக்க பயன்படுகின்ற எந்தவொரு வளமும் மற்றும் இவை வரையறுக்கப்பட்ட வழங்கல் அல்லது அருமை இருப்பதுடன், உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பக் கிரயத்துடன் தொடர்புடையதாகும். கிடைக்கக் கூடியதான விலை மற்றும் சந்தையில் பரிவர்த்தனை தனிப்பட்ட உரிமை மற்றும் பொருளாதார வளங்கள் என்பன இயற்கையாக கிடைப்பதில்லை. இதற்கு விலைமதிப்பு உள்ளது.

(உ+ம்) உற்பத்தி செயன்முறையில் ஈடுபடும் தொழிலாளர், மூலப்பொருட்கள், காணி கட்டடங்கள், கனியவளம்.

பொருளாதாரவளம் பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு பண்பைக் கொண்டிருக்குமாயின் அது பொருளாதாரவளமாகக் கருதப்படும்.

- வரையறுக்கப்பட்ட நிரம்பல் (பற்றாக்குறை) (அருமை)
- சந்தர்ப்பச் செலவு / அமைய செலவு
- வளப்பயன்பாட்டைக் கொண்டிருக்கும்.
- உரிமை பாராட்டத்தக்கது.

பொருளாதாரவளம் நான்கு வகைப்படும். அவையாவன நிலம், ஊழியர், மூலதனம், முயற்சியான்மை

(b) i. **சந்தர்ப்பச் செலவு / அமைய செலவு**

அருமையானதும் மாற்றுப்பயன்பாட்டைக் கொண்டதுமான வளங்களைப் பயன்படுத்தி ஒரு தெரிவினைத் பூர்த்தி செய்யும் போது அதற்காக விட்டுக் கொடுக்கப்படும் அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதி குறிப்பிட்ட தெரிவிற்கான சந்தர்ப்பச் செலவாகும்.

சந்தர்ப்பக்கிரயம் என்பதில் உண்மைக் கருத்து அது பணமதிப்பை உள்ளடக்கியது அன்று சந்தர்ப்பக்கிரயம் பொருளாதார லாபத்தை கணிப்பதற்கு கருத்தில் கொள்ளப்படும்.

**கணக்கீட்டு கிரயம் (கணக்கீட்டு செலவு)**

கணக்கீட்டுச் கிரயத்தின் தன்மையானது ஒரு நிறுவனம் உற்பத்திக்காக வெளியிலிருந்து பெறப்பட்ட உள்ளீட்டுக்கு மேற்கொண்ட செலவுகளைக் குறிக்கும். கணக்கீட்டுச் கிரயமானது உற்பத்திச் செலவின் உள்ளார்ந்த செலவை உள்ளடக்காது வெளிப்படையான செலவை மட்டும் உள்ளடக்கியதாகும். கணக்கீட்டுச் செலவானது கணக்கீட்டு இலாபத்தை கணிப்பிட பயன்படும்.

ii.

(a) **சந்தர்ப்பக் கிரயத்திற்கான -உதாரணம்**

தனிப்பட்ட நபர் தனது வணிகத்திற்கு வழங்கும் தனது சொந்த உழைப்பு சொத்துக்களின் மூலம் இழக்கும் வருமானங்களைக் குறிக்கும்.

(b) **கணக்கீட்டுக் கிரயத்திற்கான -உதாரணம்**

வணிக நிறுவனம் தனக்கு தேவையான தொழிலாளர்கள் மற்றும் மூலதனத்தை வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளுமாயின் அதற்காக ஏற்படும் செலவினம் கணக்கீட்டு செலவினம் எனப்படும்.

## வினா 3ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) சந்தைப் பொருளாதாரமானது விலை மூலம் வழிநடத்தப்படுகிறது. அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் விலைப் பொறிமுறை மூலம் தீர்க்கப்படுகிறது. விலை உற்பத்தி பொருட்களின் கேள்வி நிரம்பல் சக்தியினால் தீர்மானிக்கப்படும். சந்தைச் சமநிலையின் போது கேள்வி நிரம்பல் ஆகிய முறன்பட்ட சக்திகளும் இணக்கப்பாட்டிற்கு உள்ளாகும் நிலையாக கருதப்படுகிறது. இந்நிலையில் சமநிலை விலை தொகை தீர்மானிக்கப்படுகிறது.

சந்தைச் சமநிலை என்பது கேள்வி நிரம்பல் சமனாக இருப்பதுடன், ஒரே நேரத்தில் இரு எதிரான சக்திகள் சமநிலையில் இருப்பதை குறிக்கும். இச்சமநிலையில் தீர்மானிக்கப்படும் விலையானது விலைச்சமநிலை எனவும், அளவானது சமநிலை அளவாகவும் கருதப்படும். சந்தையின் நிரம்பல் மற்றும் கேள்வி மாற்றமடையும் போது விலைச்சமநிலை அளவு மாறும். ஆகவே சமநிலையானது வெளிப்படுத்துவது என்னவெனின் கேள்வி, நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலையில் மாற்றம் ஏற்படுத்தும்.




$P_1$ விலையில் மிகை கேள்வியாக கருதப்படுகிறது. இந்நிலையில் விலை அதிகரிக்கும், $P_3$ விலையில் மிகை நிரம்பல் காணப்பட்டு விலை குறைவடையச் செய்யும் கேள்விக் கோடும் நிரம்பல் கோடும் சந்திக்கும் புள்ளியில் சமநிலை தீர்மானிக்கப்பட்டு சமநிலை விலை $P_2$ ஆகவும் சமநிலைத் தொகை $Q_2$ ஆகவும் காணப்படுகிறது. சமநிலைப் புள்ளியில் கேள்வியும் நிரம்பலும் சமனாக காணப்படும்.

(b)

1. கேள்வி, நிரம்பல் கோட்பாடுகள் வர்த்தக நடவடிக்கைக்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது.
2. நிறுவனத்தின் பொருட்கேள்விக்கான வழங்கல் சந்தைக் கேள்வியை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகிறது.
3. பொருட்கள் சேவைக்கான கேள்வி நிரம்பல் சந்தை வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

4. கேள்வி நிரம்பல் தொடர்பான அறிவு நிறுவனத்திற்கு பின்வரும் தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகிறது.

- விற்பனை எதிர்வு கூறல் - விற்பனை தீர்மானங்களை மேற்கொள்கிறது. (விலைமாற்றம்)
- விலைக்கொள்கை - விலை உயர்துதல் அல்லது குறைத்தல் போன்ற தீர்மானம் மேற்கொள்வதற்கு
- விலையில்லாக் கொள்ளை - நிரம்பல் அதிகளவாக காணப்படும் போது விளம்பரப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் உத்திகளை பயன்படுத்தல்.
- பன்முகத்தன்மை - நெகிழ்ச்சிக்கேற்ப கேள்வி மாற்றத்தை அறிவதற்கு
- வருமான நெகிழ்வுத் தன்மை - மெய்த் தேசிய வருமான மட்டத்தில் ஏற்படும் மாற்றத்தை அறிவதற்கு
- வணிக சுழற்சிகள் - உண்மைத் தேசிய வருமானத்தில் ஏற்படும் மாற்றம் கேள்வியில் சுழற்சியான மாற்றத்தை ஏற்படுத்தும்.

## வினா 4 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a ) **தனியுரிமைப் போட்டியின் பண்புகள்**

1. அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் காணப்படும். பூரண பிரதியீடு அல்லாத நெருங்கிய பிரதியீட்டுப் பொருட்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும்.
2. உற்பத்தி வகையீடு - பொருள் வேறுபடுத்தல் காணப்படும் (மூலப்பொருள், வடிவமைப்பு, நிறம், போன்றன வேறுபடுத்திக் காணப்படும்.)
3. விலைகளின் மேல் செல்வாக்கு செலுத்துதல் - ஏகஉரிமை நிறுவனம் ஒரு பொருளின் விலையில் குறிப்பிட்ட அளவிற்கு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
4. நிறுவனம் ஒன்றில் ஒன்று தங்கிநிற்காமை - ஒவ்வொரு நிறுவனமும் தனது உற்பத்தி பொருளின் விலையை தாமே தீர்மானிக்கிறது - வெளியீட்டின் கொள்கையானது கேள்வியில் தங்கிநிற்கிறது.
5. உயர் விளம்பரப்படுத்தல் - நுகர்வோரை வெற்றி கொள்ள நிறுவனமானது விளம்பரப்படுத்தலில் கணிசமான செலவினத்தையும் மற்றும் விற்பனையுடன் தொடரபான செலவினத்தையும் உள்ளடக்கியிருத்தல்.
6. நுழைவு மற்றும் வெளியேறும் சுதந்திரம் - சந்தையில் புதிய நிறுவனம் உள்ளே வருதல் மற்றும் ஏற்கனவே இருக்கும் நிறுவனம் வெளியேறுதல் இலகுவாகின்றது.

(b) 1. **கொடுக்கல் வாங்கல் தூண்டல் / புழக்க நோக்க கேள்வி**

மக்கள் நாளாந்த கொடுக்கல் வாங்கல் தோற்றம் கருதி வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு கொடுக்கல் வாங்கல் பணத்தின் கேள்வியாகும். இது மெய் வருமானத்துடன் தொடர்புபட்டதாகும்.

2. **முன்னெச்சரிக்கை நோக்கத் தூண்டல்**

மக்களுக்கு எதிர்பாராமல் ஏற்படும் செலவினங்களுக்காக நிகழ்காலத்தில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே முன்னெச்சரிக்கை நோக்க தூண்டலாகும். எதிர்பாராமல் ஏற்படும் செலவினங்களாவன மருத்துவச் செலவு, வாகன திருத்தச் செலவு என்பனவாகும்.

3. **உத்தேச நோக்கத் தூண்டல்**

எதிர்காலத்தில் வருமானத்தினை உழைக்கும் நோக்கோடு மக்கள் நிகழ்காலத்தில் வைத்திருக்கும் பணத்தின் அளவு உத்தேச நோக்க பண கேள்வியாகும்.

உத்தேச நோக்கக் கேள்விக்கும் வட்டி வீதத்திற்கும் இடையே எதிர்க் கணியத் தொடர்பு காணப்படும்.

## வினா 5 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) அரசாங்க வரவுு செலவுத்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள்

1. வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதற்கு
2. வருமான மீள்பங்கீடு மேற்கொள்வதற்கு
3. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊக்குவிப்பிற்கு
4. உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒதுக்கீட்டிற்கு
5. பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுதல்.
6. அரசியல் நோக்கங்களை அடைதல்.

(b ) தரைவிலை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கப்படுகிறது.




1. உற்பத்தியாளரைப் பாதுகாக்க குறைந்தபட்ச கொள்வனவு விலை பயன்படுத்துதல். இதன் நோக்கம் என்னவெனின் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை நிர்ணகித்து அவர்களுடைய வருமானத்தை பாதுகாத்தல். / or உறுதிசெய்தல்
2. குறைந்த பட்ச கொள்வனவு விலை மிகை நிரம்பலை ஏற்படுத்துகிறது.
3. மிகை நிரம்பலைத் தவிர்ப்பதற்கு அத்தியாவசிய நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால்

அது சந்தை விலையை மிகவும் குறைந்தமட்டத்திற்கு செல்ல வழிவகுப்பதால் உற்பத்தியாளர்கள் அதிக இடர்களை எதிர்நோக்குவர்.

4. மிகை நிரம்பலைத் தடுப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.
   - மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்து எதிர்கால பாவனைக்காக களஞ்சியப்படுத்தல்.
   - மிகை நிரம்பலை ஏற்றுமதி செய்தல்.
   - மிகை நிரம்பலைப் பயன்படுத்தி பதிலீட்டு பொருட்களை உற்பத்தி செய்தல்.
5. மிகை நிரம்பலை பயன்படுத்த முடியாவிடின் மற்றும் கொள்வனவாளரகளை அடையாளம் கண்டுகொள்ளாவிடின் இது வினைத்திறனற்ற வள ஒதுக்கீட்டை ஏற்படுத்தும்.
6. இதனால் இடைத்தரகர்கள் பொருளை வாங்குவதற்கு உரிய சாத்தியக்கூறு ஏற்படுவதால் உற்பத்தியாளர்களிடம் இருந்து குறைந்த விலையில் வாங்கி தரைவிலையில் விற்பனை செய்யலாம்.
7. பெரிய அளவிலான அறுவடை களஞ்சியப்படுத்தலில் பிரச்சனை ஏற்படும்.

aat SRI LANKA

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**இப்பகுதியில் ஒரு வினாவுக்கு விடையளிக்குக.**
**(மொத்தப் புள்ளி 20)**

## வினா 6 ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) i. **பயன்கள்**

1. தேசிய வருமானக் கணக்கீட்டின் பயன்பாடுகள்.
   ஓட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளின் செயல்திறனின் முக்கிய குறிகாட்டியாக தேசிய வருமானமாகும். இத் தேசிய வருமானமானது குறித்த காலத்தில் அதாவது ஒரு வருடத்தில் நாட்டின் வளங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமதிபற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.
2. பொருளாதாரத்தின் வெவ்வேறுபட்ட துறைகளின் செயல்திறனை அளப்பதற்கு தேசிய வருமானம் பயன்படுகிறது.
3. இதனை ஆண்டுகளுக்குகிடையில் ஒப்பீடு செய்ய பயன்படுத்த முடியும், இதன் பொருட்டு ஆண்டுகளுக்கு இடையில் அர்த்தமுள்ள ஒப்பீடு ஒன்றை செய்ய வழிவகுக்கின்றது.
4. தேசிய வருமானம், குறிப்பாக தனிநபர் வருமானம் மற்றைய நாடுகளுடன் ஒப்பீடு செய்ய பயன்படுகிறது.
5. இது வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள முறையை புரிந்து கொள்ள உதவுவதுடன் அவ்வளங்கள் தவறான முறையில் பயன்படுத்தபடுவதை அடையாளம் காண உதவுகின்றது.
6. ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை அளக்க பயன்படுவதுடன் வருடங்களுக்கு இடையே ஒப்பீடு செய்ய உதவுகிறது.
7. நாட்டின் கொள்வனவு மற்றும் முதலீட்டுக்கான செலவு செய்யும் தொகையையும், சேமிப்பிலுள்ள தொகையையும் மதிப்பீடு செய்ய பயன்படுத்தமுடியும்.
8. பொருளாதார திட்டங்களை தயார்படுத்தவும், அதனை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.
9. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு பயன்படுகிறது.

ii. **தேசிய வருமான மதிப்பீட்டின் வரையறைகள்**

- தேசிய வருமானம் உள்நாட்டு பொருளாதார வெளியீட்டின் பெறுமதியை அளக்க பயன்படுகிறது. ஆனால் சமூக நலனை அளவிட பயன்படுவதில்லை.
- தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் வருமானப் பங்கீட்டினை புரக்கணிக்கின்றது. ஆது பணக்கார மற்றும் ஏழைகளின் வருமான ஏற்றத் தாழ்வை கணக்கெடுப்பதில்லை.
- அளவீடுகளின் தவறுகள் அதாவது, தேசிய வருமான புள்ளிவிபரங்கள், கறுப்பு சந்தை நடவடிக்கைகள், மறைமுக பொருளாதார நடவடிக்கைகள் (underground activities), சில நேர் உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்குவதில்லை.
- தேசிய வருமானம் ஓய்வு, வேலைத் திருப்தி, உற்பத்தித் தரம் என்பவற்றை அளவிடுவதில்லை.
- சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை துள்ளியமாக பிரதிபலிப்பதில்லை. உதாரணம் சுற்றுப்புறச் சூழல் மாசடைதல்.
- தேய்மானத்தை கணிப்பிடுவதில் பயன்படும் வெவ்வேறு முறைகள் மற்றும் தேய்மானம் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள்.
- தேசிய கணக்கீட்டின் “இரட்டை எண்ணல்” தவறுகள்.

(b) (i) **<u>காரணி கிரய விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி</u>**

| **விபரம்** | | **ரூபா (மில்லியன்)** |
|---|---|---|
| தனியார் நுகர்வு | | 30 |
| அரச நுகர்வு | | 07 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | | 08 |
| **மொத்த உள்நாட்டு செலவு** | | **45** |
| கூட்டுக: தேறிய ஏற்றுமதி - | ஏற்றுமதி 10 | |
| | இறக்குமதி (12) | (02) |
| சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 43 |
| கழிக்குக : | | |
| செலவீனம் மீதான நேரில் வரி | | (06) |
| கூட்டுக : | | |
| மானியம் | | 02 |
| காரணி கிரய விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 39 |

(ii) **<u>காரணி கிரய விலையில் மொத்த தேசிய உற்பத்தி</u>**

| | | **ரூ(மில்லியன்)** |
|---|---|---|
| சந்தை விலையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 43 |
| கூட்டுக : தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் | | (1) |
| **சந்தை விலையின் மொத்த தேசிய உற்பத்தி** | | **42** |
| கழிக்குக : செலவீனம் மீதான வரி | 6 | |
| கூட்டுக : மானியங்கள் | 2 | (4) |
| **காரணி கிரய விலையின் மொத்த தேசிய உற்பத்தி** | | **38** |

(c) . **<u>கேள்வித் தூண்டல் பணவீக்கம்</u>**

1. மொத்த நிரம்பலை விட மொத்த கேள்வி வேகமாக அதிகரிப்பின் போது விலையில் தொடர்சியான அதிகரிப்பு ஏற்படும் சந்தர்ப்பமே கேள்வி தூண்டல் பணவீக்கம் எனப்படும்.
2. மொத்த கேள்வி பின்வரும் காரணங்களால் அதிகரிக்கும். அதாவது மொத்த நுகர்வு, மொத்த முதலீடு, அரசாங்க செலவினங்கள் அல்லது இவை அனைத்தும் சேர்ந்தவை.
3.



$AD_1$ வளைவில் விலையானது $P_1$, மொத்த கேள்வி அதிகரிக்கும் போது $AD_1$ வளைவானது $AD_2$ இற்கு மாற்றமடைகிறது. அத்துடன் விலையானது $P_2$ ஆக அதிகரிக்கிறது.

<u>**செலவு - உதைப்பு பணவீக்கம்**</u>

1. இது நிரம்பல் பகுதியில் இருந்து உருவாக்கப்படுகிறது. மற்றும் இது உற்பத்தி செலவில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாகும்.
2. நிரம்பல் சாரபான பணவீக்கத்திற்கான காரணங்கள்.
    1. குறிப்பாக விவசாயத்துறையில் வரட்சி மற்றும் வெள்ளம் காரணமாக மொத்த நிரம்பல் பாதிக்கப்படுதல்.
    2. பரந்த தொழிலாளர் பகிஸ்கரிப்பானது உற்பத்தி மற்றும் விநியோகத்தைப் பாதித்தல்.
    3. வர்த்தக சங்க நடவடிக்கை காரணமாக ஏற்படும் அதிக ஊதிய கொடுப்பனவுகள்.
    4. உள்நாட்டு வழங்களில் இருந்து விநியோகிக்கப்படும் மூலதனங்களின் விலை அதிகரிப்பு.
    5. சர்வதேச பொருட்களின் விலை அதிகரிப்பு அல்லது உள்நாட்டு பணவீழ்ச்சியானது இறக்குமதி உள்ளீடுகள் மற்றும் முடிவுப் பொருட்களின் விலையை அதிகரிக்கும்.
3. மொத்த நிரம்பல் வளைவானது $AS_1$ இலிருந்து $AS_2$ இற்கு உள்நோக்கி நகரும் போது கேள்வியில் மாற்றம் இல்லை. ஆகையால் பொருளின் விலையானது $P_1$ இலிருந்து $P_2$ இற்கு அதிகரிக்கிறது.




**பிரிவு *C* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2014 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*